தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

15.11.2012 P.M

16.11.2012 A.M

## தீபாவளி : ஈரோடு கால்நடைச் சந்தையில் வர்த்தகம் பாதிப்பு

தீபாவளி முடிந்து 2 நாள்கள் மட்டுமே ஆன நிலையில் ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்கு கால்நடைகள் குறைவாக வந்ததால் வர்த்தகம் பாதிக்கப்பட்டது. ஆந்திர வியாபாரிகள் வருகை காரணமாக எருமைகள் விற்பனை அதிகரித்தது.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் மாட்டுச் சந்தையில் ஆந்திரம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள் மாடுகளை வாங்குகின்றனர்.

தீபாவளி முடிந்த நிலையில் மாட்டுச்சந்தையில் மாடுகள் வரத்து குறைவாகவே இருந்தது. புயல், மழை காரணமாக கடந்த 3 வாரங்களாக நடந்த மாட்டுச் சந்தைக்கு ஆந்திர மாநில வியாபாரிகள் வராததால் விற்பனை மந்தமாகவே இருந்தது.

கர்நாடகம், கேரள மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகளும், தமிழகத்தைச் சேர்ந்த வியாபாரிகளும் மாடுகளை வாங்கிச் சென்றனர். இந்நிலையில் இந்த வாரம் நடந்த சந்தையில் கடந்த வாரத்தை விட எருமைகள் வரத்து அதிகமாக இருந்தது. எருமைகளை அதிக அளவில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் செல்வது வழக்கம்.

கால்நடைச் சந்தைக்கு 400 எருமைகளும், 300 முதல் 350 பசுமாடுகளும் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. இதில் எருமைகள் ரூ.16,000 முதல் ரூ.35,000 வரையும், பசுமாடுகள் ரூ.18,000 முதல் ரூ.34,000 வரையும் விற்பனையாயின.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள் அதிக அளவில் எருமைகளை வாங்கியதால் அவை 90 சதவீதம் விற்பனையாகின. மற்ற மாடுகள் குறைந்த அளவே விற்பனை ஆனதாக கால்நடைச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

## 23-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வேலூர் ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 23-ம் தேதி மாவட்ட அளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

காலை 10.30 மணியளவில் தொடங்கும் இக்கூட்டத்துக்கு ஆட்சியர் பொ.சங்கர் தலைமை தாங்குகிறார்.

விவசாயிகள் இக்கூட்டத்தில் தங்கள் குறைகளை தெரிவிக்கலாம் என ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரப்பர் தோட்டங்களில் டெங்கு கொசு உற்பத்தி ?

குமரி மாவட்டத்தில், குடியிருப்புப் பகுதிகளின் அருகே உள்ள ரப்பர் தோட்டங்களின் மூலம் டெங்கு கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்குளம், விளவங்கோடு, தோவாளை வட்டப் பகுதிகளில் பெருமளவு ரப்பர் தோட்டங்கள் உள்ளன. இப்போது மக்கள் வசிக்கும் பகுதிகளைச் சுற்றிலும் அதிகமான ரப்பர் மரங்கள் நடப்பட்டுள்ளன.

இந்த ரப்பர் மரங்களில் பால் சேகரிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள, கொட்டாங்கச்சி அல்லது பிளாஸ்டிக் கப்புகளில் மழைக் காலத்தில் தண்ணீர் நிரம்பி நிற்கும். மழைக் காலங்களில் தொடர்ந்து சில நாள்களுக்கு பால்வடிப்பு செய்ய முடியாத நிலையில், கொட்டாங்கச்சிகளில் தேங்கி நிற்கும் தண்ணீரில் கொசுக்கள் உற்பத்தியாவதாகக் கூறப்படுகிறது.

இதில் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களும் உற்பத்தியாவதாகக் கூறப்படுகிறது.

மழைக் காலங்களில் பால்வடிப்பு நடைபெறாத நாள்களில், ரப்பர் மரங்களில் கொட்டாங்கச்சியை கவிழ்த்து வைக்கும் நடைமுறையை குறிப்பிட்ட சிலர் மட்டுமே செய்கின்றனர். எனவே இதுகுறித்து தேவையான நடவடிக்கையை எடுக்க சுகாதாரத் துறை முன்வர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதுகுறித்து திருவட்டார் வட்டார சுகாதார ஆய்வாளர் ஒருவர் கூறியதாவது, மழைக் காலங்களில் ரப்பர் மரங்களில் வைக்கப்பட்டுள்ள கொட்டாங்கச்சிகளில் தண்ணீர் தேங்கி நிற்காத அளவில், அவற்றைக் கவிழ்த்து வைக்க ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் முன்வர வேண்டும்.

குறிப்பாக குடியிருப்புப் பகுதிகளின் அருகே உள்ள தோட்டங்களில் இத்தகைய நடைமுறைகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து 3 நாள்களுக்கும் மேலாக கொட்டாங்கச்சிகளில் தண்ணீர் தேங்கி நின்றால், சாதாரண கொசு முதல் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் வரை உற்பத்தியாகிவிடும். பொதுமக்கள் இதில் அதிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றார் அவர்.

## ராபி முன்பருவ முகாம் : 420 விவசாயிகளுக்கு ரூ.1.45 கோடி கடனுதவி

தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ராபி முன்பருவ முகாமில் 420 விவசாயிகளுக்கு ரூ. 1. 45 கோடி கடனுதவியை மாவடட ஆட்சியர் எஸ்.நாகராஜன் வியாழக்கிழமை வழங்கினார்

தக்கலை அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ராபி முன்பருவ 2-ம் கட்ட முகாமில் 1,126 விவசாயிகள் பங்கேற்றனர்.

இதில் கிசான் அட்டை பெற்ற 338 பேருக்கு ரூ. 78 லட்சம், பால் உற்பத்தியாளர்கள் 71 பேருக்கு ரூ. 56 லட்சம், தேன் வளர்ப்புக்காக 3 பேருக்கு ரூ.2 லட்சம், கோழி வளர்க்கும் 8 பேருக்கு ரூ. 9 லட்சம் என மொத்தம் 420 விவசாயிகளுக்கு ரூ. 1.45 கோடி கடன் உதவி வழங்கப்பட்டது.

முன்னதாக, ஆட்சியர் எஸ்.நாகராஜன் முகாமில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களைப் பார்வையிட்டார்.பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து விவசாயிகளுக்கு அவர் பயிர்க் கடன்களை வழங்கினார்.

தொடர்ந்து கப்பியறை புலிமுகத்தான் குறிச்சி பயிறு விவசாயிகள் ஆர்வலர் குழுவுக்கு விதைப்பெருக்க திட்ட சுழல்நிதியை வழங்கி அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பத்மநாபபுரம் எம்.எல்.ஏ. புஷ்பலீலா ஆல்பன், நகர்மன்றத் தலைவர் எஸ்.ஆர் சத்யாதேவி, மேலாண்மை இணை இயக்குநர் சையது அகமசது மீராஞ்சி, துணை இயக்குநர்கள் நாகமணிபிள்ளை, கே.பி.ஸ்ரீகுமார், இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் போஸ்வின் வின்சென்ட் சாம், ஐ.ஓ.பி. மண்டல மேலாளர் பத்மராகம், முன்னோடி வங்கி மேலாளர் கஜேந்திரநாதன், நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் சங்கர், கோழிப்போர்விளை வட்டார வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குநர் பாலசந்தர், வேளாண்மை துறை தொழில்நுட்ப அலுவலர்கள் சதீஷ்குமார், தமிழ்ச்செல்வி, ஜெகன்ஸ்பாபு, பேரூராட்சித் தலைவர்கள் கிரேஸிலின் ஜோஸ், (முளகுமூடு ), கோபகுமார் (இரணியல்), ஊராட்சித்

தலைவர்கள் முருகராஜன் (திக்கணங்கோடு), சரோஜா (முத்தளக்குறிச்சி) மற்றும் ஊராட்சி, பேரூராட்சித் தலைவர்கள், பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**உரம் விற்பனையில் முறைகேடு செய்தால் நடவடிக்கை '**

தூத்துக்குடி மாவட்டத்தில் உரம் விற்பனையில் வியாபாரிகள் முறைகேடு செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

குறிப்பாக, விவசாயப் பணிகள் தொடங்கியுள்ள நிலையில் உரம் சரியான முறையில் கிடைக்கவில்லை என்றும், உர விற்பனை நிலையங்களில் வாங்கும் உரங்களுக்கு உரிய விலைக்கான ரசீது வழங்கப்படுவதில்லை என்றும் விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

இதற்கு பதிலளித்த வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ரஞ்சித் சிங் தன்ராஜ், உர விற்பனை நிலையங்களில் அவ்வப்போது ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது என்றார்.

ஆட்சியர் ஆஷிஷ்குமார் பேசுகையில், உர விற்பனையில் முறைகேட்டில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரித்தார். மேலும், கரும்பு விவசாயிகளை மிரட்டும் தனியார் சர்க்கரை ஆலைகள் குறித்த விவரம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் ,குறிப்பிட்ட சர்க்கரை ஆலை நிர்வாகம் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆட்சியர் தெரிவித்தார். இதேபோல, ஓட்டப்பிடாரம் பகுதியில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவது குறித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆட்சியர் தெரிவித்தார். நிலம் புயல் பாதிப்பு காரணமாக வாழை பயிர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு உரிய நிவாரணத் தொகையை விரைவில் வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதேபோல, புதுக்கோட்டை அருகே விவசாயத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படும் தனியார் ரசாயன தொழிற்சாலை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர். இதற்கு பதிலளித்த ஆட்சியர், சம்பந்தப்பட்ட தனியார் ரசாயன தொழிற்சாலை குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும், அந்த ஆலை மீது உரிய நவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

**தமிழகத்துக்கு 4.8 டிஎம்சி தண்ணீர் : கர்நாடகத்துக்கு காவிரி கண்காணிப்புக் குழு உத்தரவு**

தமிழகத்துக்கு நவம்பர் 16 முதல் 30-ம் தேதி வரை 4.8 டிஎம்சி தண்ணீர் வழங்குமாறு கர்நாடக அரசுக்கு காவிரி கண்காணிப்புக் குழு வியாழக்கிழமை உத்தரவிட்டது. வறட்சிகால நீர்ப் பங்கீட்டு முறைப்படி இதனை வழங்குமாறு கண்காணிப்புக்குழு வலியுறுத்தியுள்ளது.

காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவரும் மத்திய நீர்வளத் துறை செயலருமான துருவ் விஜய் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்கேற்ற தமிழக அரசின் தலைமைச் செயலர் தேவேந்திரநாத் சாரங்கி, ""காவிரி நடுவர்மன்றத்தின் இடைக்கால உத்தரவின்படி, தமிழகத்துக்கு நவம்பர் 16-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை 8 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும்; தமிழகத்தில் சம்பா பயிர்களின் பாசனத்துக்காகக் கர்நாடகம் வழங்க வேண்டிய 52.5 டிஎம்சி தண்ணீரையும் உடனடியாக வழங்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

அதற்கு பதிலளித்த கர்நாடக அரசின் தலைமைச் செயலர் எஸ்.வி. ரங்கநாத், ""நவம்பர் 1-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை தமிழகத்துக்கு வழங்க வேண்டிய தண்ணீரின் அளவை கர்நாடகம் வழங்கி விட்டது.

கர்நாடகத்தில் தென்மேற்குப் பருவ மழை குறைவாகப் பெய்துள்ளது. தற்போது அணையில் உள்ள தண்ணீர் கர்நாடகத்தின் நீர்ப் பாசனத்துக்கும் குடிநீருக்கும் மட்டுமே போதுமான அளவில் உள்ளது. ஆகையால் தமிழகம் குறிப்பிடும் பற்றாக்குறை நீரை வழங்க இயலாது'' என்று கூறினார்.

இரு மாநில வாதத்தைக் கேட்ட கண்காணிப்புக் குழுவின் தலைவர் துருவ் விஜய் சிங் பிறப்பித்த உத்தரவில் ""வறட்சிக் கால நீர்ப் பங்கீட்டு முறைப்படி நவம்பர் 16- 30-ம் தேதி வரை தமிழகத்துக்கு 4.8 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும்.

தென்கிழக்குப் பருவ மழை முடிவுக்கு வந்த பிறகே பற்றாக்குறை நீரின் இறுதி அளவை கணக்கிட முடியும். ஆகையால், பற்றாக்குறை நீர்ப் பிரச்னையில் கண்காணிப்புக் குழுவால் இறுதி முடிவு எதையும் எடுக்க முடியவில்லை. குழுவின் அடுத்த கூட்டம் நவம்பர் 28-ம் தேதி நடைபெறும்'' என்று குறிப்பிட்டார்.

உச்ச நீதிமன்றத்தில் முறையிடப்படும்... ""பற்றாக்குறை நீர் விவகாரத்தில் கண்காணிப்புக் குழு எந்த முடிவும் எடுக்க முடியாது என்று கைவிரித்து விட்டது. ஆகையால் சம்பா சாகுபடிக்குத் தேவையான நீரை கர்நாடகம் வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையிடுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று தமிழக அரசின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"பற்றாக்குறை நீர் விவகாரத்தில் தமிழகம் தெரிவிக்கும் அளவுக்கும் கர்நாடகம் குறிப்பிடும் அளவுக்கும் இடையே அதிக வேறுபாடுகள் உள்ளன. எந்த அறிக்கையின் அடிப்படையில் இறுதி முடிவு எடுப்பது என்ற குழப்பம்தான் கண்காணிப்புக் குழுத் தலைவர் எந்த முடிவையும் எடுக்காததற்கு காரணம்"என்று மத்திய நீர் வளத் துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

காவிரியில் இருந்து கர்நாடகம், பற்றாக்குறை நீரின் அளவான 48 டிஎம்சி நீரை வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் வழக்கு தொடர்ந்திருந்தது. அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ""காவிரி நீர்ப் பிரச்னை தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும்'' என்று கடந்த அக்டோபர் மாதம் 30-ம் தேதி உத்தரவிட்டது. எனினும், காவிரியில் இருந்து ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை வழங்க வேண்டிய 52.5 டிஎம்சி நீரை வழங்க முடியாது என்று கர்நாடக அரசு திட்டவட்டமாக மறுத்ததால் இறுதி முடிவு எடுக்கப்படாமல் காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுத் தலைவர் தனது உத்தரவில், "பற்றாக்குறை நீர் விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்க முடியவில்லை'' என்று கூறியுள்ளார்.

அதை அடிப்படையாக வைத்து உச்ச நீதிமன்றத்தில் முறையிட தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் இம்மாதம் 26-ம் தேதி காவிரி விவகாரம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. அப்போது தமிழகம் முறையிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**அணைகளை திறக்க தேவையில்லை**

""கர்நாடக அணைகளைத் திறக்காமல், தமிழகத்துக்கு இம்மாதம் வழங்க வேண்டிய 4.8 டிஎம்சி நீரை வழங்கலாம்'' என்று கர்நாடக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காவிரி கண்காணிப்புக் குழுவின் உத்தரவு குறித்து கர்நாடக உயரதிகாரி ஒருவர் கூறுகையில், ""4.8 டிஎம்சி நீர் என்பது சுமார் 55,000 கன அடி நீராகும். அதில், ஏற்கனவே 23,000 கன அடி நீரை தமிழகத்துக்கு வழங்கி விட்டோம். நவம்பர் 16 முதல் 30-ம் தேதி வரை, மீதமுள்ள 32,000 கன அடி நீரை வழங்கினாலே போதுமானது. இதற்காக கர்நாடக அணைகளை திறக்கத் தேவையில்லை.

மழை நீரும், அணையில் இருந்து வரும் நீர்க் கசிவையும் வைத்து இந்த அளவு நீரை வழங்கலாம்'' என்று அந்த அதிகாரி கூறினார்.

15th nov 2012 P.M

**பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணைத் திறப் பு**



பாபநாசம் அணையில் இருந்து வியாழக்கிழமை பிசான பருவ சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 11 கால்வாய்கள் மூலம் 86,107 ஏக்கர் நிலங்கள்
பாசன வசதி பெறும் என அமைச்சர் சி.த. செல்லபாண்டியன் தெரிவித்தார்.

வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ள நிலையில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. முதல் கட்டமாக கடனாநதி, ராமநதி அணைகள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு இம்மாதம் 9 ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனிடையே பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் இருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். பாபநாசம் அணையின் நீர்மட்டம் 77.45 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 283.80 கனஅடி நீர்வரத்து இருந்தது.

அதன்படி வியாழக்கிழமை பாபநாசம் அணையில் இருந்து மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.த. செல்லபாண்டியன் பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் இரா. செல்வராஜ், மாநில வீட்டு வசதி வாரியத் தலைவர் ஆர். முருகையாபாண்டியன் முன்னிலை வகித்தனர்.

பின்னர் அமைச்சர் அளித்தப் பேட்டி: திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 11 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்கு பிசான சாகுபடிக்காக முதல்வர் ஜெயலலிதா தண்ணீர் திறக்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி பாபநாசம் அணையில் இருந்து தாமிரவருணி பாசனத்திற்கு பிசான சாகுபடி பணிகளை தொடங்க 600 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பாசனத்திற்கு வருகிற 31.03.2013 ம் தேதி வரை 137 நாட்களுக்கு தண்ணீர் வழங்கப்படும்.

இதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கு மற்றும் தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையம்கால்வாய், திருநெல்வேலி கால்வாய் ஆகிய 7 கால்வாய்கள் மூலம் 40,000 ஏக்கரும், தூத்துக்குடி மாவட்டத்தில் மருதூர் மேலக்கால்வாய், கீழக்கால்வாய், தெற்கு பிரதான கால்வாய், வடக்கு பிரதானக் கால்வாய் ஆகிய 4 கால்வாய்கள் மூலம் 46,107 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். விவசாயிகள் நீரினை சிக்கனமாக பயன்படுத்தி பயன்பெற வேண்டும். தேவையை பொறுத்து விவசாயத்திற்கு கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்படும். இதன் மூலம் குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது என்றார் அவர்.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ஜெகநாதன், தாமிரவருணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் முத்துபாண்டியன், அணை செயற்பொறியாளர் ஜார்ஜ்செல்வமணி, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ரோஹ்னிராம்தாஸ், இசக்கிசுப்பையா எம்.எல்.ஏ, திருநெல்வேலி மேயர் விஜிலாசத்யானந்த், உதவி செயற்பொறியாளர்கள் தமிழ்செல்வன், மதனசுதாகரன், மாணிக்கவாசகம், பாலசுப்பிரமணியன், உதவி பொறியாளர் ராமையா,

தூத்துக்குடி துணை மேயர் சேவியர், நகராட்சித் தலைவி இ. மனோன்மணி,

நகராட்சி துணைத் தலைவர்கள் டி. கணேசபெருமாள், ரா. மாரிமுத்து, தாமிரவருணி திட்டக்குழு தலைவர் டி. உதயசூரியன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ப. முத்துகிருஷ்ணன், பேரூராட்சி தலைவர்கள் வி. சிவன்பாபு, ஏ.கே. சீனிவாசன், என். கணேசன், கா. அல்லாபிச்சை, பொ. இசக்கிபாண்டியன், எஸ். மலைராஜா, சிவந்திபுரம் ஊராட்சி துணைத் தலைவர் பா. பிராங்க்ளின், மற்றும்

விவசாயிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் வழங்கப்படும் உதவித் தொகை விவரம்

தமிழக அரசின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரம் செய்யப்படுகிறது எனத் தெரிவித்தார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளது:

திருவாரூர் மாவட்டத்தில் புதன்கிழமை (நவம்பர் 14) முதல் வெள்ளிக்கிழமை (நவம்பர் 16) வரை உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை குறித்து பிரசாரம் செய்யப்படுகிறது. நவம்பர் 17 முதல் 21-ம் தேதி வரை கணக்கெடுப்புப் பணியாளர்கள் வீடுதோறும் வருவர். அவர்களிடம் உழவர் பாதுகாப்பு அட்டை பெற விண்ணப்பித்தவர்கள் முழு விவரத்துடன் நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பதை கொடுக்கலாம்.

## பயிற்சி முகாம்

கரூர் மாவட்டம், சின்னதாராபுரத்தில் கால்நடை மருந்தகம் சார்பில் விவசாயிகளுக்கு இறவைத் தீவன அபிவிருத்தித் திட்டம் குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இதில் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ், தீவனப் பயிரிடுதல் குறித்துப் பேசினார். முகாமில் அணைப்பாளையம், சூடாமணி, கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, தொக்குப்பட்டி, ராஜபுரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட கால்நடை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

மருத்துவர்கள், ஆய்வாளர்கள், உதவியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.30, சென்னையில் ரூ. 3.35.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள் முதல் விலை கிலோ ரூ.40, முட்டைக் கோழி கிலோ ரூ.47.

## உணவு பதப்படுத்தும் ஆலை தொடங்க மத்திய , மாநில அரசுகள் மானியம்

உணவு பதப்படுத்தும் ஆலைகள் அமைக்க மானியம் வழங்கப்பட உள்ளதாக விழுப்புரம் மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் மா. சண்முகம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் மற்றும் தமிழக அரசு இணைந்து 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய மத்திய அரசுத் திட்டமான தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத் திட்டத்தை 2012-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த உள்ளது. ÷இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் மத்திய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் திட்டங்களை மாநில அரசுகள் மூலம் செயல்படுத்துவதே ஆகும். தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் மூலமாக மத்திய, மாநில மற்றும் மாவட்ட அளவில் இயக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

÷இத்திட்டத்தில் மானிய பங்குத் தொகையை 75:25 என்ற விகிதத்தில் மத்திய அரசும் மாநில அரசும் வழங்கி செயல்படுத்த உள்ளது. உணவு பதப்படுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி நாட்டிலுள்ள விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கவும், மாநில அரசின் வேளாண் திட்டங்களுக்கும். உணவு பதப்படுத்தும் தொழில் பிரிவின் வளர்ச்சிக்கும் உதவிடும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

இதன்படி, தொழில்நுட்பம் மேம்பாடு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், நவீனப்படுத்துதல் திட்டத்துக்கு கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமானத்துக்கு 25 சதவீதம் அதிகபட்சமாக ரூ.50 லட்சம் நிதியுதவியும்,

÷குளிர்பதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம் போன்ற வசதிகளை தோட்டக் கலைப்பயிர்கள்

அல்லாத பொருட்களுக்கான திட்டத்துக்கு கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமானத்துக்கு 50 சதவீதம் அதிகபட்சமாக ரூ.10 கோடி நிதியுதவியும், ÷மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களான உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம், பட்டய படிப்புகளுக்கான உட்கட்டமைப்புகளுக்கு அதிகபட்சமாக ரூ.75 லட்சமும் நிதியுதவியும், தொழில்முனைவோர் பயிற்சிகள் திட்டத்துக்கு ஓரு தொழில் முனைவோருக்கு ரூ.2 லட்சம் சுழற்சி முதலீட்டுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. பலபொருள் பயிற்சி - அதிகபட்சமாக ரூ.11 லட்சம் நிலையான முதலீட்டுக்கும் மற்றும் ரூ. 4 லட்சம் சுழற்சி முதலீட்டுக்கும் வழங்கப்படுகிறது. விளம்பரம் மூலம் மேம்பாட்டு திட்டங்களான கருத்தரங்கு மற்றும் பணிமனைக் கூடம் திட்டத்துக்கு திட்ட மதிப்பில் 50 சதவீதம், அதிகபட்சமாக ரூ.3 லட்சம் நிதியுதவியும், கருத்துக்காட்சி மற்றும் கண்காட்சிக்கு திட்டத்துக்கு ஏற்றவாறும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 2012 ஏப்ரல் முதல் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதால், 12-வது ஐந்தாண்டுத் திட்ட வழிமுறைகளின்படி மானியம் கோரும் அனைத்து புதிய விண்ணப்பங்களை மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கம் வேளாண்மை துணை இயக்குநர்(வேளாண் வணிகம்) மூலமாக மாநில இயக்கத்துக்கு அனுப்ப வேண்டும்.

மேலும் இது குறித்த விவரங்கள் அறிய மாவட்டத்தில் உள்ள வேளாண் துணை இயக்குநரை அணுகலாம். அல்லது ஜ்ஜ்ஜ். ம்ர்ச்ல்ண்.ய்ண்ஞ்.ண்ய் ல் என்ற இணையதள முகவரியில் பார்க்கலாம்.

**மல்லிகைத் தோட்டத்தில் தீ: ரூ. 5 லட்சம் சேதம்**

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சி மடத்தில் செவ்வாய்க்கிழமை மல்லிகைத் தோட்டம் தீயில் எரிந்ததில் ரூ. 5 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் சேதமடைந்தன.

ராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சி மடம் சுப்பையா மகன் பாஸ்கரன்(50). இவருக்குச் சொந்தமான மல்லிகைத் தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை திடீரென தீப்பிடித்தது. இதில் மல்லிகை வளர்ப்பு பந்தல், பதியச் செடிகள் ஆகியன சேதமடைந்துள்ளன. சேத மதிப்பு ரூ. 5 லட்சம் இருக்கலாம் எனவும், மின்கசிவு காரணமாக தீப்பிடித்திருக்கலாம் எனவும் தெரிய வருகிறது.

இது குறித்து, தோட்டத்தின் உரிமையாளர் பாஸ்கரன் கொடுத்த புகாரின் பேரில் தங்கச்சி மடம் போலீஸôர் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
16.11.2012 A.M

## பிசான சாகுபடி பாசனத்திற்கு பாபநாசம் அணை திறப்பு

விக்கிரமசிங்கபுரம் : நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் பிசான சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணை நேற்று திறக்கப்பட்டது. அணையை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செல்லப்பாண்டியன் திறந்து வைத்தார்.

மொத்தம் 144 அடி கொள்ளளவு கொண்ட நெல்லை மாவட்டத்தின் பிரதான அணையான பாபநாசம் அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை பயன்படுத்திதான் நெல்லை, தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டங்களின் பெரும்பாலான விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 77.45 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 89.63 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 63.10 அடியாகவும் இருந்தது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 283.80 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. நெல்லை மாவட்டத்தில் கார்சாகுபடி பொய்த்துப்போன நிலையில் வழக்கமாக நவம்பர் மாதம் துவங்கும் பிசான சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணையை திறக்க முதல்வர் உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து பாபநாசம் அணையை நேற்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செல்லப்பாண்டியன் திறந்து வைத்தார். பிசான சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணையிலிருந்து 600 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையை திறந்து வைத்து அமைச்சர் செல்லப்பாண்டியன் கூறியதாவது:-

முதல்வர் உத்தரவை தொடர்ந்து இன்று (நேற்று) அணை திறக்கப்பட்டது. இதன் மூலம் இந்த இரு மாவட்டங்களிலும் மொத்தம் 86 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்களில் பிசான சாகுபடி செய்ய பயன்படுத்தும் இந்த நீர் தொடர்ந்து 137 நாட்களுக்கு திறந்து விடப்படும். அணையிலிருந்து 600 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் பிரச்னையும் தீரும் வாய்ப்புள்ளது" என்றார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் முருகையாபாண்டியன், அம்பை எம்.எல்.ஏ., சுப்பையா, நெல்லை கலெக்டர் செல்வராஜ், சேரன்மகாதேவி சப்-கலெக்டர் ரோகினி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ஜெகநாதன், செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், உதவி செயற்பொறியாளர் தமிழ்செல்வன், உதவி பொறியாளர் ராமையா, பாபநாசம் கீழணை செயற்பொறியாளர் ஜார்ஜ்செல்வமணி, உதவி செயற்பொறியாளர்கள் மாணிக்கவாசகம், பாலசுப்பிரமணியன், நெல்லை மேயர் விஜிலா, உட்பட அரசு அதிகாரிகள் மற்றும் கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.

## நெல் அறுவடை செய்ய கூலியாட்கள்

தட்டுப்பாடு: வீணாகி வரும் நெற்பயிர்கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிணற்று பாசனம் மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ள முதல் போக நெல் பயிர் அறுவடை பணிக்கு, கூலி ஆட்கள் தட்டுப்பாட்டால், அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.கே.ஆர்.பி., அணை பாசன பகுதிகளான பெரியமுத்தூர், சின்னமுத்தூர், அவதானப்பட்டி, சந்தாபுரம், கால்வேஅள்ளி, நெடுங்கல், பென்னேஸ்வர மடம் ஆகிய சுற்றுவட்டார பகுதியில், அதிக பரப்பில், நெல் சாகுபடி செய்யப்படுகிறது.இந்தாண்டு, கே.ஆர்.பி., அணையில், போதிய தண்ணீர் இல்லாததால் முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடவில்லை. இதனால், கிணற்று பாசனம் மூலம் முதல் போக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.சில ஆண்டுக்கு முன், நெல் அறுவடைக்கு கூலி ஆட்கள் தங்கு தடையில்லாமல் இருந்தது. நெல் அறுவடை செய்யும் கூலி ஆட்களுக்கு கூலியாக நெல் தரப்படும். இதற்காக, கூலி ஆட்கள் ஒரு நாள் முன்னதாகவே நெல் வயல்களில் வந்து தங்கி அறுவடையை செய்வார்கள்.மாவட்டத்தில், தற்போது துவங்கியுள்ள முதல் போக நெல் அறுவடைக்கு கூலி ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் பரவலாக தேசிய வேலை உறுதியளிப்பு திட்டம் செயல்படுத்தி வருவதால், கூலி ஆட்கள் அந்த வேலைக்கு செல்லவே விரும்புகின்றனர்.

மேலும், சில ஆண்டாக கூலி ஆட்கள் நெல் அறுவடைக்கு வர ஆர்வம் காட்டுவதில்லை. இதன் காரணமாக, தற்போது, அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்கள் வயல்களில் சாய்ந்து உள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த காலங்களில் நெல் பயிரிடும் விவசாயிகள் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரையும் விவசாய பணிகளில் ஈடுபடுத்துவார்கள். நெல் அறுவடை பணிகளையும் அவர்களே செய்வார்கள்.தற்போது, விவசாய குடும்பத்தில் உள்ளவர்களும், தங்கள் குழந்தைகளை விவசாயத்தில் ஈடுபடுத்தாமல், கல்வி பயில பள்ளிக்கு அனுப்ப ஆர்வமாய் உள்ளனர். இதனால், அனைத்து விவசாய பணிகளுக்கும் கூலி ஆட்களை நம்பியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், விவசாய கூலி ஆட்கள் பலரும் தினந்தோறும் உடனடியாக பணம் கைக்கு வரும் கட்டிட

வேலை போன்ற வேலைகளுக்கு விரும்பி போகின்றனர். இதனால், நெல் அறுவடைக்கு கூலி ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

## தீவிர முன்பருவ முனைப்பு முகாம்

மண்ணச்சநல்லூர்: அழகிய மணவாளத்தில் தீவிர முன்பருவ முனைப்பு முகாம் நடந்தது. மண்ணச்சநல்லூர் யூனியன், அழகிய மணவாளம் கிராமத்தில் உணவு உற்பத்தியை அதிகரித்திட, விவசாயிகளுக்கான தீவிர முன்பருவ முனைப்பு முகாம் நடந்தது. முகாமை எம்.எல்.ஏ., பூனாட்சி துவக்கி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.
பஞ்சாயத்துத்தலைவர் அனந்தராஜன் தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் ஜெயபாலன் வரவேற்றார். வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) தலைவர் துரை சக்திவேல், ஒன்றிய கவுன்சிலர் ராணி, மாவட்ட ஜெ., பேரவைச் செயலாளர் ராமு உட்பட பலர் பங்கேற்றனர்.

## தீவிர முன்பருவ முகாம் விவசாயிகள் பங்கேற்பு

துவரங்குறிச்சி: மருங்காபுரி வட்டார வேளாண்மைத்துறை சார்பில், அட்மா திட்டத்தின் கீழ் உணவு உற்பத்தியை பெருக்க தீவிர முன்பருவ முகாம் அ.பொருவாய் மற்றும் காரைப்பட்டியில் நடந்தது.
மருங்காபுரி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பூவலிங்கம் தலைமை வகித்தார்.
பஞ்சாயத்து தலைவர்கள் அ.பொருவாய் பழனிசாமி, காரைப்பட்டி வேலு முன்னிலை வகித்தனர்.
விதைச்சான்று அலுவலர் சுரேஷ், துணை வேளாண் அலுவலர்கள் தங்கராஜ், அட்மா திட்ட மேலாளர் திருமுருகன், வேளாண்மை அலுவலர் கருணாமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கேற்று, உணவு உற்பத்தியை பெருக்கும் முறைகள் பற்றியும், விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழல்நுட்பங்கள் பற்றியும் சிறப்பு பயிற்சி அளித்தனர்.
மருங்காபுரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மனோகரன், அன்பழகன், மருங்காபுரி கால்நடை டாக்டர் ரமேஷ், வேளாண்மை உதவி அலுவலர்கள் சக்திவேல், கணேசன், சீனிவாசன், ஜஸ்டின், செந்தில்குமார் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.
திருச்சி தில்லைநகர் அக்ரிமெட் நிறுவனம் சார்பில் முகாமில் கண்காட்சி நடந்தது.

## சான்று விதைகளை பயன்படுத்தினால் கூடுதல் மகசூல் பெறலாம் : இயக்குனர்

பெரம்பலூர்: ""விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தினால், கூடுதல் மகசூல் பெறலாம்,'' என கோவை விதைச்சான்று இணை இயக்குனர் தங்கராசு தெரிவித்துள்ளார்.
பெரம்பலூர் மாவட்டத்தில் நடந்து வரும் விதைச்சான்று திட்டப்பணிகள் குறித்து, கோவை

விதைச்சான்று இணை இயக்குனர் தங்கராசு ஆய்வு மேற்கொண்டார். பின் அவர், மாவட்ட உதவி இயக்குனர் அலுவலகத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்திலும், வேப்பந்தட்டை அருகே உள்ள அனுக்கூர் குடிக்காடு கிராமத்தில் விவசாயி மணிகண்டன் வயலில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை வி.ஆ.ஐ., 2 சான்று நிலை விதைப்பண்ணையை ஆய்வு செய்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:

விவசாயத்தில் விதை முக்கிய இடு பொருளாக இருப்பதால், சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து ஆர்வமுடன் விதை உற்பத்தியாளராக மாற வேண்டும். தங்களுக்கு தேவையான விதையை உரிய அளவு உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தும் போது, 20 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும்.

சான்று விதை உற்பத்தி பயிற்சியை பெறும் விவசாயிகள், சிறந்த முறையில் விவசாயம் செய்து பயன் பெற வேண்டும். தமிழகத்தில் மாநில அளவில் விதைப்பண்ணை பதிவு செய்ய வேண்டிய பரப்பளவு, 56 ஆயிரத்து, 500 ஹெக்டர். சான்று செய்ய வேண்டிய விதை அளவு, ஒரு லட்சத்து, 5 ஆயிரம் மெட்ரிக் டன். பரிசோதனை செய்ய வேண்டிய மாதிரிகள், 86 ஆயிரத்து, 500 ஹெக்டராகும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் பதிவு செய்ய வேண்டியது, 761 ஹெக்டர் பரப்பளவு. குழுசான்று செய்ய வேண்டிய விதையளவு, 1,450 மெட்ரிக் டன்கள். இந்த இலக்கை அடைய தனியார் மற்றும் அரசு விதை உற்பத்தியாளர்கள் அனைவரும் சான்று விதை உற்பத்தி செய்து, இலக்கை அடைய ஒத்துழைப்பு தர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.ஆய்வின்போது, விதைச்சான்று உதவி இயக்குனர் முரளிதரன், விதை சான்று அலுவலர் பழனிச்சாமி, விதை பரிசோதனை அலுவலர்கள் தெய்வீகன், சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கரும்பு விவசாயிகள் சங்க மாநாடு நடப்பு

பெரம்பலூர்: தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் வெள்ளி விழா மாநாடு, துறைமங்கலம் சங்க அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடந்தது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் செல்லதுரை மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் அன்பழகன் மாநாட்டின், மூன்றாண்டு செயல்திட்ட அறிக்கையை சமர்ப்பித்தார். மாநாட்டில் சங்கத்தின் மாநில துணை தலைவர் காமராஜ் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, பேசினார். மாநாட்டில், பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் பங்குதாரர்கள் சங்க தலைவர் துங்கபுரம் முருகேசன் வாழ்த்துரை வழங்கினார். மாநாட்டில், கரும்பு டன் ஒன்றுக்கு, 3,500 ரூபாய் வழங்க வேண்டும், வெட்டுக்கூலி முழுவதும் ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும், பெரம்பலூர் சர்க்கரை ஆலையின், 35வது பேரவை கூட்டம் சென்னை காஞ்சி ஹோட்டலில் நவ., 27 நடைபெற இருந்ததை, பெரம்பலூரில் டிச., 12ம் தேதி நடைபெற ஆவண

செய்த, பெரம்பலூர் கலெக்டர், சர்க்கரை துறை கமிஷனர், மாவட்ட போலீஸ் துறைக்கும் நன்றி தெரிவிப்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
மாநாட்டில் மாவட்ட தலைவராக ராஜேந்திரன், மாவட்ட செயலாளராக அன்பழகன், மாவட்ட துணை தலைவராக பிச்சைபிள்ளை, துணை செயலாளராக கனகராஜ், முனுசாமி, மாவட்ட பொருளாளராக காமராஜூ ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

## விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு

பெரம்பலூர்: "தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட, 5வது மாநாடு வரும், 26, 27 ஆகிய தேதிகளில் நடக்கிறது' என, சங்கத்தின் மாவட்ட செயலாளர் செல்லதுரை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட, 5வது மாநாடு வரும், 26ம் தேதி மற்றும் 27ம் தேதி என, இரண்டு நாட்கள், பெரம்பலூர் ஜே.கே., மஹாலில் நடக்கிறது. 26ம் தேதி மாலை, 4 மணிக்கு பெரம்பலூர் மேற்கு வானொலி திடலில் பேரணி துவங்கிறது. பேரணியை கரும்பு விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் காமராஜ் துவக்கி வைக்கிறார். பெரம்பலூர் புது பஸ்ஸ்டாண்ட் திடலில் பேரணி நிறைவடையும். அங்கு நடக்கும் பொதுக்கூட்டத்துக்கு மாவட்ட செயலாளர் செல்லதுரை தலைமை வகிக்கிறார். பொதுக்கூட்டத்தில் மாநில தலைவரும், எம்.எல்.ஏ.,வுமான பாலகிருஷ்ணன், மாநில துணைத்தலைவர் முகமதுஅலி, மாநில பொருளாளர் நாகப்பன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று பேசுகின்றனர். பொதுக்கூட்ட முடிவில், தஞ்சை தப்பாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், கிராமிய பாடல்கள், மதுரை சந்திரனின் கிராமிய கலை நிகழ்ச்சி, பட்டிமன்றம், பயிர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, நவீன உழவடை கருவிகள் கண்காட்சி மற்றும் செய்முறை விளக்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடக்கிறது.
27ம் தேதி பிரதிநிதிகள் மாநாடு துறைமங்கலம் ஜே.கே., மஹாலில் நடக்கிறது. மாநாட்டில் கடந்த காலங்களின் சங்கத்தின் செயல்பாடுகள், வரும் காலங்களில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.
மாநாட்டிற்கான ஏற்பாடுகளை ராஜேந்திரன், அன்பழகன், ஜெயராமன், ராஜூ, பிச்சைப்பிள்ளை உள்ளிட்ட குழுவினர் செய்து வருகின்றனர்.

## நவரை பருவத்திற்காக தென்னேரி மதகு திறப்பு

வாலாஜாபாத்:விவசாயத்திற்காக, தென்னேரி ஏரி மதகு திறந்து விடப்பட்டது. இதை தொடர்ந்து, பயிரிடும் பணிகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
காஞ்சிபுரம் மாவட்டத்தில், மிக பெரிய ஏரிகளில் ஒன்று தென்னேரி ஏரி. இந்த ஏரி, 18 அடி ஆழம், 750 ஏக்கர் பரப்பளவு கொண்டது.

இந்த ஏரி நீரை பயன்படுத்தி, தென்னேரி அகரம், நாவிட்டாங்குளம், மடவிளாகம், மஞ்சம்மேடு, வாரணவாசி, ஆம்பாக்கம், கட்டவாக்கம், அயிமிச்சேரி, திருவங்கரணை உள்ளிட்ட, பல்வேறு கிராமத்தைச் சேர்ந்த, விவசாயிகள் பயிரிட்டு வருகிறனர்.தற்போது, நவரை பருவம் துவங்கியுள்ளது. ஏரியில் உள்ள, எட்டு கன அடி நீரை, விவசாய பயன்பாட்டிற்காக, வாலாஜாபாத் ஒன்றியக் குழு வரதராஜுலு தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் கணேசன் ஏரி மதகினை திறந்து வைத்தார்.

## நவீன தொழில்நுட்பம் மூலம் குறைந்த செலவில் அதிக மகசூல்

திருவள்ளூர்:"நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, குறைந்த செலவில் அதிக மகசூலை பெருக்க வேண்டும்' என, விவசாயிகளுக்கான ரபி முன்பருவ முனைப்புக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

திருவள்ளூர் அடுத்த, திருவூர் வேளாண்மை அறிவியல் நிலையம், மாவட்ட வேளாண்மை துறை சார்பில், வட்டார அளவிலான ரபி முன்பருவ முனைப்பு இயக்க கூட்டம் நேற்று நடந்தது. இதில், விவசாயிகளுக்கு ரபி முன்பருவ சாகுபடி குறித்து, பயிற்சி மற்றும் சந்தேகங்களுக்கு, கடம்பத்தூர் வேளாண் உதவி இயக்குனர் சுரேஷ், வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் நிர்மலாதேவி உள்ளிட்டோர் விளக்கினர்.நிகழ்ச்சியில், வேளாண் துறை துணை இயக்குனர் ஜெயச்சந்திரன் பேசியதாவது:சாதாரண முறையில் நாற்று நட ஒரு ஏக்கருக்கு, 30 முதல், 50 கிலோ விதை நெல் தேவை. இதற்கு, 1,200 ரூபாய் வரை செலவாகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில், ஒரு ஏக்கருக்கு, நான்கு முதல், ஐந்து கிலோ விதை போதுமானது. இதற்கு, 200 ரூபாய் மட்டுமே செலவாகும்.

நவீன தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட வேளாண் கருவிகளான, கோனே வீடர் கருவியின் மூலம் களை எடுப்பதால், ஏக்கருக்கு, 10 முதல், 20 மூட்டைகள் வரை, கூடுதல் மகசூல் கிடைக்கும். ரசாயன உரங்கள் பயன்படுத்தினால் மகசூல் அதிகமாக கிடைக்கும் என, கூறுவது தவறு. முடிந்தவரை இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்.உரம் இடுவதற்கு முன்பாக, குறிப்பிட்ட மண்ணை ஆய்வு செய்து, அதற்கு ஏற்ப உரங்களை இட வேண்டும். ஒற்றை நெல் சாகுபடி, விதை நேர்த்தி, தீவிர நெல் சாகுபடி ஆகியவற்றை பயன்படுத்தி குறைந்த செலவில், அதிகளவில் வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.இப்பயிற்சியில், கடம்பத்தூர் ஒன்றியம் விடையூர் கிராமத்தை சேர்ந்த, 100 விவசாயிகள் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை யூனியன் பிலிப்பாக் குட்டையில், அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. அட்மா திட்ட தலைவர் பிரசன்னா தலைமை வகித்தார். நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம், வேளாண் அலுவலர் உமாமகேஷ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பயிற்சியில், மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பம், விற்பனை யுக்தி உள்ளிட்டவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது. துணை வேளாண் அலுவலர் மாதேஸ்வரன், உதவி வேளாண் அலுவலர் ராம்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை யூனியன் பிலிப்பாக் குட்டையில், அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. அட்மா திட்ட தலைவர் பிரசன்னா தலைமை வகித்தார். நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம், வேளாண் அலுவலர் உமாமகேஷ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பயிற்சியில், மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பம், விற்பனை யுக்தி உள்ளிட்டவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது. துணை வேளாண் அலுவலர் மாதேஸ்வரன், உதவி வேளாண் அலுவலர் ராம்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

## தாவர எண்ணெய் இறக்குமதி ஒரு கோடி டன்

புதுடில்லி: அண்மையில் முடிவடைந்த, 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (நவம்பர் - அக்டோபர்), நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி, 17 சதவீதம் அதிகரித்து, 1 கோடி டன்னை தாண்டியுள்ளது.

இது, கடந்த பருவத்தில், 87 லட்சம் டன்னாக இருந்தது என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு (எஸ்.இ.ஏ.,) தெரிவித்துள்ளது.மக்கள் தொகை பெருக்கம் மற்றும் தனி நபர் எண்ணெய் பயன்பாடு அதிகரிப்பு போன்றவற்றால், உள்நாட்டில், தாவர எண்ணெய்க்கான தேவை, கூடுதலாக, 8 லட்சம் டன் வரை உயர்ந்துள்ளது.மேலும், தாவர எண்ணெய் விலை குறைந்து காணப்பட்டதால், உள்நாட்டில், இதன் பயன்பாடு வெகுவாக அதிகரித்துள்ளது என, எஸ்.இ.ஏ., மேலும் தெரிவித்துள்ளது.மலேசியாவில் கையிருப்பு அதிகரிப்பு மற்றும் இந்தோனேஷியா அரசு, கச்சா பாமாயில் ஏற்றுமதிக்கான வரியை குறைத்தது போன்றவற்றால், இதன் இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.ஒட்டு மொத்த, 1.02 கோடி டன் தாவர எண்ணெய் இறக்குமதியில், சமையல் எண்ணெய்யின் பங்களிப்பு, 1 கோடி

டன்னாகவும், சமையல் சாராத எண்ணெய்யின் பங்களிப்பு, 2 லட்சம் டன்னாகவும் உள்ளது.நாட்டின் பாமாயில் இறக்குமதி, 65.40 லட்சம் டன்னிலிருந்து, 76.60 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.மேலும், சோயா எண்ணெய் இறக்குமதி, 10.70 லட்சம் டன்னாகவும், சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி, 11.30 லட்சம் டன்னாகவும், கடுகு எண்ணெய் இறக்குமதி,91 ஆயிரம் டன்னாகவும் உள்ளது.ஒட்டு மொத்த எண்ணெய் பயன்பாடு, 12.50 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாகவே, நடப்பு பருவத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி அதிகரித்துள்ளது.இந்தியா, பாமாயிலை, இந்தோனேஷியா மற்றும் மலேசியா நாடுகளிலிருந்தும், சோயா எண்ணெய்யை, பிரேசில் மற்றும் அர்ஜெண்டினா ஆகிய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்து கொள்கிறது.

## தமிழகத்தில் முட்டை விலை 315 காசாக நிர்ணயம்



நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. இதில், 330 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டையின் விலையில், 15 காசு குறைத்து, 315 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை விறுவிறுவென ஏற்றம் கண்டு வந்த நிலையில், நேற்று ஒரே நாளில், 15 காசு சரிந்திருப்பது, கோழிப்பண்ணையாளர்களை அதிர்ச்சிஅடையச் செய்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:

சென்னை, 335 காசு, பெங்களூரு, 325 காசு, மைசூரு, 327, ஐதராபாத், 302, மும்பை, 334, விஜயவாடா, 297, கோல்கட்டா 325, பார்வாலா, 302, டில்லி, 325, காசு. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 44 ரூபாயாக

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 37 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

16.11.2012 A.M

## தமிழகத்துக்கு 4.8 டிஎம்சி தண்ணீர்



புதுடெல்லி : காவிரியில் நவம்பர் 15ம் தேதி முதல் 30ம் தேதி வரை தமிழகத்துக்கு 4.81 டிஎம்சி தண்ணீரை திறந்து விடும்படி கர்நாடகாவுக்கு காவிரி கண்காணிப்பு குழு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்துக்கு கர்நாடகா தர வேண்டிய பாக்கி 52 டிஎம்சி தண்ணீரை காவிரியில் திறந்து விடுவது பற்றி முடிவு எடுக்கும்படி காவிரி கண்காணிப்பு குழுவுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தது. இந்நிலையில், டெல்லியில் இந்த குழுவின் 30வது கூட்டம் நேற்று நடைபெற்றது. காவிரி கண்காணிப்பு குழுவின் தலைவரும், மத்திய நீர்வளத் துறை செயலாளருமான துருவ் விஜய் சிங் தலைமை வகித்தார்.

இதில், தமிழகம் சார்பில் தலைமைச் செயலாளர் தேபேந்திரநாத் சாரங்கி, பொதுப்பணித் துறை செயலாளர் சாய்குமார் மற்றும் தமிழக காவிரி குழுவின் தலைவர் சுப்ரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கர்நாடகா சார்பில் அம்மாநில தலைமை செயலாளர் ரங்கநாத் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். கேரள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். புதுச்சேரி சார்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

கூட்டத்தில் பேசிய தமிழக அதிகாரிகள், 'தமிழகத்தில் சம்பா பயிரை காப்பாற்ற வேண்டியிருப்பதால், தமிழகத்துக்கு கர்நாடகா தர வேண்டிய பாக்கி நீரான 52 டிஎம்சி.யை காவிரியில் திறந்து விட உத்தரவிட வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது. அதற்கு, கர்நாடக

அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். 'கர்நாடகாவில் 40 சதவீத மழை பொய்த்து விட்டதால், தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. எனவே, தமிழகத்துக்கு தண்ணீர் தர முடியாது' என்று அவர்கள் கூறினர். இந்த கூட்டம் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

பின்னர் துருவ் விஜய் சிங் பிறப்பித்த உத்தரவில், ''தமிழகத்துக்கு கர்நாடகா 52 டிஎம்சி தண்ணீரை கொடுக்க வேண்டும் என்ற பிரச்னையில் கண்காணிப்பு குழு தலையிட முடியாது. இருப்பினும், தமிழகத்தில் சம்பா பயிரை காப்பாற்ற, காவிரியில் வரும் 15ம் தேதி முதல் 30ம் தேதிக்குள் 4.81 டிஎம்சி தண்ணீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டும்'' என்று உத்தரவிட்டார். இதையடுத்து, பாக்கி தண்ணீரை பெறுவதற்காக தமிழக அரசு மீண்டும் உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**உருளைகிழங்கை உடனே விற்க அறிவுரை**



கோவை : தமிழகத்தில் திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி, மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் மட்டுமே உருளைகிழங்கு பயிரிடப்படுகின்றது. இந்நிலையில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் செல்வராஜ் கூறியதாவது: செப்டம்பர், அக்டோபர் 2012ல் விதைத்து நவம்பர், டிசம்பரில் அறுவடைக்கு வரும் சமயத்தில் உருளைகிழங்கிற்கு நல்ல விலை கிடைக்குமா,

உடனடியா விற்பதா, சேமித்து விற்பதா என்ற பல்வேறு சந்தேகங்கள் விவசாயிகளுக்கு உள்ளது. இதற்காக, தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், தமிழகத்தின் முக்கிய உருளைகிழங்கு சந்தையான மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி

கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 22 வருடங்கள் உருளைகிழங்கு விலை நிலவரத்தை ஆய்வு செய்து அதன் முடிவுகளை வெளியிட்டது.

அதன்படி, உருளைகிழங்கின் விலை வரும் டிசம்பர் மற்றும் 2013 ஜனவரியில் 45 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ.750 முதல் ரூ.1000 வரை கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதன்பின், மூன்று மாதங்களுக்கு விலை ஏறுவதற்கு வாய்ப்புகள் குறைவு. எனவே, விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட கிழங்கினை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்று விடவேண்டும். இவ்வாறு செல்வராஜ் தெரிவித்தார். மேலும் விவரங்களுக்கு 0423,2442170 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
இன்றைய வேளாண் செய்திகள்
16.11.2012 A.M

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை ஒரே நாளில் 15 காசுகள் சரிவு 315 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 15 காசுகள் சரிவடைந்து 315 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

**முட்டை விலை உயர்வு**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 330 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 315 காசுகளாக சரிவடைந்து உள்ளது.

**பிற மண்டலம்**

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:–

ஐதராபாத்–302, விஜயவாடா, தனுகு–297, பார்வாலா–302, சென்னை–335, மைசூர்–327, பெங்களூர்–325, மும்பை–334, டெல்லி–325, கொல்கத்தா–325.

முட்டைக் கோழி கிலோ ரூ.47–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.3 குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டைக்கோழி கிலோ ரூ.44 ஆக சரிவடைந்து உள்ளது. இதேபோல் கறிக்கோழி கிலோ ரூ.52–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு அதிரடியாக ரூ.15 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.37 ஆக சரிவடைந்து உள்ளது.

**காரணம் என்ன ?**

தீபாவளி பண்டிகை முடிந்து விட்டதால், தமிழகத்தில் முட்டை மற்றும் கோழி விற்பனை சற்று குறைந்து உள்ளது. அதேசமயம் பிற மண்டலங்களிலும் முட்டை விலை கிடுகிடு என சரிவடைந்து வருகிறது. இதுவே விலை குறைப்புக்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.